# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 01 புதன்கிழமை 17.07.2024 கதிர் 252


## சுதேச மருத்துவம் தொடர்பான தேசியக் கொள்கைக்கு அனுமதி

### அமைச்சரவை வழங்கியது

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன மற்றும் சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி ஆகியோரின் ஆதரவுடனும் அர்ப்பணிப்புடனும் நீண்டகால முயற்சியின் பின்னர் 2024--2034 காலப்பகுதியில் சுதேச மருத்துவம் தொடர்பான தேசியக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசதகவல்திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையில் மிக உயர்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஹெலமருத்துவம் நீண்டகாலமாக தலைமுறை தலைமுறையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது, நாட்டின் நான்கு திசைகளிலும் ☞ 2

## உண்மை ஆணைக்குழு குறித்த திருத்திய சட்டமூலத்திற்கு அனுமதி

இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு தொடர்பான திருத்தப்பட்ட சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தாவது:

இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுச் சட்டமூலத்தை அரசவர்த்தமானியில் வெளியிடுவதற்காக 2023.12.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பின்னர், பல்வேறு தரப்பினர் இச்சட்டமூலத்திற்கு மேலும் திருத்தங்களை முன்மொழிந்தமையால், குறித்த சட்டமூலத்தைப் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான இடைச் செயலகத்தின் ஆலோசனைக் கலந்துரையாடல்கள் பல இடங்களிலும் நடத்தப்பட்டு, இச்சட்டமூலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளன. அத்திருத்தங்களை உள்ளடக்கி அடிப்படைச் சட்டமூலத்திற்கமைய, சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும், இதற்கு முன்னர் இச்சட்டமூலத்திற்காக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்வதற்கும் ஜனாதிபதியும், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஆகியோர் இணைந்து இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

## இனி இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா இல்லையா என்பது ஒருபுறம் கேள்விக்குறியாகவே தொடர்ந்துகொண்டிருந்தாலும் தேர்தலுக்கான காலம் நெருங்க நெருங்க தென்னிலங்கையில் அரசியல் காட்சிகள் பரபரப்பாக மாற்றம் பெறத் தொடங்குகின்றன.

ரணிலுக்கும் ராஜபக்சக்களுக்கும் இடையிலான உறவு தொடர்ந்தும் சுமுகமாக நீடிப்பதற்கான வாய்ப்புக்கள் குறைந்து வருகின்றன. தமது அரசியலையும் கட்சியையும் பாதுகாக்கும் ராஜபக்சக்களின் நோக்கத்திற்கு இசைந்து இழுபட ரணில் தயாராக இல்லை. அதனால் தமது கட்சி சார்பில் ஒருவரை வேட்பாளராக நிறுத்தலாம் என்பதில் மொட்டுக் கட்சியின் உயர் மட்டத்தில் ஒரு தரப்பு உறுதியாக இருக்கின்றது. மொட்டுவின் சின்னத்தில் நின்றால் தமிழ், முஸ்லிம்கள் உட்பட சிங்களவர்களில் ஒரு தரப்பினரின் வாக்குகளையும்தான் இழக்கவேண்டி வரும் என்பதால், கட்சி சாராத ஒரு பொதுவேட்பாளராக அதாவது நாட்டின் தேசத் தந்தையாக (ஸ்டேட்ஸ்மன்) தன்னை நிலைநிறுத்தி அதன் ஊடாக வெற்றி வாய்ப்பை அதிகரிக்கலாமா என்பதுதான் ரணிலின் யோசனை.

அதனால் சுதந்திரக்கட்சியிலிருந்து வந்தவர்கள், மொட்டுவில் ☞ 2

# அரசமைப்பின் 22ஆவது திருத்தம் நெருக்கடியை ஏற்படுத்தும் முயற்சி

### சட்டத்தரணிகளின் ஒன்றிணைவு எதிர்ப்பு

**ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளாக வரையறுக்கும் வகையில் அரசு முன்வைக்கும் அரசமைப்பின் 22ஆவது திருத்தம் தேர்தல் முறையை மேலும் நெருக்கடிக்குள் கொண்டு செல்வதற்கான முயற்சியாகும். இதன்மூலம் இரண்டு தேர்தல்களை அடுத்தடுத்து நடத்தவேண்டிய சுமை ஆளும் தரப்புக்கு ஏற்படும் என்று சட்டத்தரணிகளின் ஒன்றிணைவு தெரிவித்துள்ளது.**

**பத்துக்கும் அதிகமான ஜனாதிபதி சட்டத்தரணிகள், பேராசிரியர்கள் உள்ளிட்ட ஏராளமான சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து** ☞ 2

## புதிய சட்டமூலங்கள் குறித்து மாணவரிடையே போட்டிகள்

### தெளிவுபடுத்தலுக்காக ஆளும் தரப்பு முடிவு

நிதி முகாமைத்துவ சட்டமூலங்கள் மற்றும் பொருளாதார மாற்ற சட்டமூலங்கள் குறித்து பாடசாலை மாணவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் பத்திரிகை கட்டுரைப் போட்டியொன்றை நடத்த ஆளும்தரப்பு திட்டமிட்டுள்ளது.

'முறையான அரச நிதி முகாமைத்துவம் மற்றும் நிலையான பொருளாதார மாற்றத்தின் மூலம் 2048 ஆம் ஆண்டளவில் வளர்ச்சியடைந்த எனது நாடு' என்ற கருப்பொருளின் கீழ் நடத்தப்படும் இந்த தேசிய அளவிலான பத்திரிகைக் கட்டுரைப் போட்டியில் வெற்றிபெறும் மாணவர்கள் மற்றும் வெற்றி பெற்ற பாடசாலைகள் என்பவற்றுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரச பாடசாலைகள் மற்றும் பிரிவென் ☞ 8

## ஜனாதிபதி தேர்தல் காலத்தை குறைக்கும் அரசமைப்பு திருத்த வரைவுக்கு அனுமதி

ஜனாதிபதித் தேர்தல் காலம் தொடர்பில் அரசமைப்பைத் திருத்தம் செய்வது தொடர்பான சட்டத்திருத்த வரைபை வர்த்தமானி மூலம் வெளியிடவும் அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்ததாவது:

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரையின் (ஆ) பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள 'ஆறு ஆண்டுகளுக்கு மேற் பட்ட' எனும் சொல்லுக்கு மாற்றாக 'ஐந்து ஆண்டுகளுக்குமேற்பட்ட' எனும் சொல்லை பதிலீடு செய்து ☞ 8

## பட்டக் கல்வி நிறுவனங்களில் இனி வெளிநாட்டு மாணவரும்

### ஆட்சேர்ப்புக்குக் கிட்டியது அனுமதி

பட்டம்வழங்குகின்ற கல்வி நிறுவனங்கள் வெளிநாட்டு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான வசதிகளை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

செய்தியாளர்களிடம் அமைச்சரவை தீர்மானங்களை அறிவித்த போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் 17 பல்கலைக்கழகங்களில் 5 சதவீதமான வெளிநாட்டு மாணவர்களுக்குத் தற்போது ஆண்டுதோறும் இடஒதுக்கீடு வழங்கப்படுகின்றது. மேலும், பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25(அ) பிரிவின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டம் வழங்குகின்ற 26 நிறுவனங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்குள்ள இடஒதுக்கீட்டை அதிகரிப்பதன் மூலம், இலங்கையை ஆசியாவின் அறிவு மையமாக மாற்றுகின்ற நோக்கத்தை அடைய முடியுமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஆனாலும், ஒவ்வொரு நாடுகளில் பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்தபட்ச தகைமைகள், இலங்கைப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத் தில் பட்டம் பெறுவதற்கான அனுமதிக்கான தகைமையாக்கிக் கொள்வதற்கான இயலுமைக்குத் திட்டவட்டமான முறையொன்று இல்லாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஐக்கிய நாடுகள் சபையின் 193 உறுப்பு நாடுகளில் பல்கலைக்கழக அனுமதிக்காக பயன்படுத்தப்படும் குறைந்தபட்ச தகைமைகள் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25(அ) ☞ 8

## பொருட்கள் சேவைகள் கட்டணத்தையும் 20 சதவீதத்தினால் குறைக்கவேண்டும்

### அமைச்சர் காஞ்சன விஜயசேகர கோரிக்கை

மின்சாரக்கட்டணங்கள் குறைக்கப்பட்டிருப்பதை அடுத்து பொருட்கள் மற்றும் சேவைக் கட்டணங்களையும் 20% சதவீதத்தினால் குறைக்க முடியும்; குறைக்க வேண்டும் என மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜூலை, ஒக்டோபர் மாதங்களில் மின் கட்டணம் திருத்தப்பட வேண்டும் என்று ஆளும்தரப்பு முடிவு செய்துள்ளது. கடந்த மார்ச் மாதம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பின்னர், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் கோரிக்கையின் பேரில், ☞ 2

## வடக்கு மக்களை வலுப்படுத்துவதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கம்

### சஜித் பிரேமதாச அறிவிப்பு

30 வருடகாலப் போரின் சாபத்தினால் அவல வாழ்வை முன்னெடுத்து வரும் வடக்குமக்களின் எதிர்காலத்தை வலுப்படுத்துவதே ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கமாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 317ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன மன்னார், தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் ☞ 2

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இன்று மீள பணிப்புறக்கணிப்பு மிரட்டல்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விடுத்தது

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் மருத்துவ அத்தியட்சகருக்கும் அங்கு பணியாற்றும் மருத்துவர்களுக்கும் இடையிலான முரண்பாடு மேலும் தீவிரமடைந்துள்ளது. பதில் மருத்துவ அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா மீது நீதிமன்றத்தில் 5 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அவர் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் இன்று காலை 8 மணிக்குள் வைத்தியசாலை மருத்துவர் விடுதியை விட்டுவெளியேறவில்லை என்றால் தாம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இருந்து வந்தவர்கள், ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து வந்தவர்கள் ஆகியோருடன் சேர்ந்துகொண்டு இ.தொ.க., ஈ.பி.டி.பி, பிள்ளையான் கட்சி, வியாழேந்திரன் என்று தமிழ்க் கட்சிகளின் ஆதரவோடும் இறுதி நேர பேரத்தில் படிய வைக்கக்கூடிய முஸ்லிம் தரப்புகளின் ஆதரவோடும் தனது வெற்றி வாய்ப்பைப் பெருக்கிக்கொள்வதுதான் பாதுகாப்பான தெரிவு என்று ரணில் கருதுகின்றார். கட்சிகளைக் கடந்த அனைவரதும் தெரிவு என்று தன்னை அடையாளப்படுத்த அவர் முயற்சிக்கிறார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இது விடயத்தில் ரணிலுக்குத் தனது ஆதரவைத் நேரடியாகவே தெரிவித்திருக்கிறார். அண்மைய நேர்காணல் ஒன்றில் தனது மொட்டுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் தனி வேட்பாளரை நிறுத்தினால் கூட தான ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் ஆதரவு வழங்குவேன் என்று தெரிவித்திருக்கிறார்.

மறுபுறத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவை நேற்றுச் சந்தித்த மொட்டுக்கட்சியின் நிறுவுனர் பஸில் ராஜபக்ச, தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச, கட்சியின் செயலாளர் சாகர காரியவாசம் ஆகியோர் தேர்தல் நிச்சயம் நடத்தப்பட்டே ஆகவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். எக்காரணம் கொண்டும் தேர்தல் பிற்போடப்படக்கூடாது என்று தெரிவித்துள்ளனர். ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 வருடங்களா 6 வருடங்களா என்பது குறித்து இப்போதைக்கு அலட்டிக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்று நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அதாவது, அரசமைப்பின் 83 டி பிரிவைத் திருத்தும் ஆளும்தரப்பின் முடிவுக்கு மொட்டு ஆதரவளிக்காது என்பதைச் சூசகமாகச் சொல்ல முயற்சிக்கின்றது மொட்டுக் கட்சி.

தேர்தல் நெருங்க நெருங்க இந்தக் காட்சிகள் இன்னும் விரிவாகி பல கோமாளிக் கூத்துக்களுக்கு இடமளிக்கும் என்றே கொழும்பில் உள்ள அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பொன்சேகா மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோரும் ரணிலுடன் சேர்ந்துகொள்வதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாகியுள்ளன. அவர்கள் இருவருக்கும் அடுத்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் இடமள் கொடுக்கக் கூடாது என்பதில் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் உறுதியாக இருக்கின்றனர். இதனால் அவர்களும் வேறு வழியில்லாமல் ரணில் பக்கம் சாய்வர். விரைவில் இது நடக்கும் எனப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரசமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படியான அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு 30 நாட்களுக்குள் மக்கள் கருத்துக்கணிப்பை நடத்தவேண்டிய சூழ்நிலை உருவாகும்.

இதனூடாக 2 தேர்தல்களை நடத்த வேண்டிய சுமை இலங்கைக்கு ஏற்படுவதுடன், அது நெருக்கடியான நிலையை தோற்றுவிக்கும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குப் போதுமான நிதி இல்லையென ஆளும்தரப்பு பல தடவைகள் அறிவித்துள்ள நிலையில் மக்கள் கருத்துக்கணிப்பை நடத்துவதற்கு மாத்திரம் பல பில்லியன் ரூபாவைச் செலவிட நேரிடும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றம் அல்லது ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் வரையறுக்க வேண்டிய அவசரத் தேவை ஏற்படவில்லை. முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்புத் திருத்தம், தேர்தல் முறையை மேலும் நெருக்கடிக்குக் கொண்டுசெல்வதற்கான முயற்சியாகும். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்படவேண்டும்.

இலங்கை ஆளும்தரப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பு திருத்தச் சட்டமூலத்தை சட்டத்தரணிகள் ஒன்றிணைவு நிராகரிப்பதுடன், அது இந்த நாட்டின் தேர்தல் முறையைச் சீர்குலைக்கும் முயற்சியாகும். அனைத்து ஜனநாயக சக்திகளும் இந்தத் தவறான முயற்சிகளுக்குஎதிராக ஒன்றிணையுமெனஎதிர்பார்க்கின்றோம் என்றுள்ளது.

## சுதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 20,000 பாரம்பரிய மருத்துவர்கள் வாழ்ந்தாலும், அவர்களுக்கு உரிய அங்கீகாரம் கிடக்கும் வகையிலான கொள்கையொன்று இலங்கை வரலாற்றில் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தவகையில், புத்திஜீவிகளின் பரந்தளவான பங்கேற்பின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கையின் சுதேச மருத்துவ தேசிய கொள்கை 2024- - 2034 இனை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சாவகச்சேரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவ அதிகாரிகள் சங்கம் மிரட்டியுள்ளது.

நேற்றுக் காலை மருத்துவர் அர்ச்சுனாவிற்குஎதிராகசாவகச்சேரி நீதிமன்றத்தில் 5 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. மருத்துவர் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார். அவரை 75 ஆயிரம் ரூபாய் ஆள் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். பிணைக்கான நிபந்தனைகளும் விதிக்கப்பட்டன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குச் செல்லக்கூடாது, நீதிமன்ற வழக்கு விசாரணைகள் தொடர்பில் முகநூல் நேரலையிலையோ, பதிவுகள் ஊடாகவோ கருத்துத் தெரிவிக்கக் கூடாது உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

வைத்தியர் அர்ச்சுனா மற்றைய வைத்தியர்கள், அதிகாரிகள் மீது முன்வைத்த குற்றஞ்சாட்டுக்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று வாக்குமூலங்களை வழங்குமாறும் மருத்துவருக்கு மன்று கட்டளையிட்டது.

அப்படி மருத்துவர் அர்ச்சுனா, பொலிஸ் நிலையத்துக்கு வந்து வாக்கு மூலம் அளிக்கத் தவறினாலோ அல்லது ஆதாரங்களைச் சமர்ப்பிக்கத் தவறினாலோ அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு மன்று பணித்தது.

இதற்கிடையே மருத்துவர் அர்ச்சுனா இன்று காலை 8 மணிக்கு முன்னர் வைத்தியசாலை விடுதியிலிருந்து வெளியேறவில்லை என்றால் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக மருத்து அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது. இது தொடர்பில் சங்கம் நேற்று ஒரு நீண்ட அறிக்கையை விடுத்துள்ளது.

மருத்துவர் அர்ச்சுனாவிற்கும் மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கும் இடையிலான பிரச்சினையை மக்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று அந்த அறிக்கை -கூறுகின்றது. தனிப்பட்ட ஒரு மருத்துவரின் நிர்வாகம் சார்ந்த பிரச்சினை ஒட்டுமொத்த வைத்திய சமுகத்தையும் பாதித்துள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது. மருத்துவர்கள் மீது கொண்ட தனிப்பட்ட காழ்ப்புணர்வே அர்ச்சுனாவின் சர்வாதிகாரத்தனமான செயல்களுக்குக் காரணம் என்றும் அறிக்கை குற்றஞ்சாட்டுகின்றது.

நோயாளர்களது உணவைத் தான் உண்பது, வேலை நேரங்களில் சமூக வலைத்தளங்களினைப் பயன்படுத்தல், தனது உயர் அதிகாரிகளின் கட்டளைகளை மீறுதல், வைத்தியசாலை விடுதிகளை தன்னகப்படுத்தல், தனக்கு நியமிக்கப்பட்ட நியமனத்திற்கு செல்லாமல் சாவகச்சேரி வைத்தியசாலையின் சாதாரண செயற்பாடுகளுக்கு ஊறு விளைவித்தல், தான் இதுவரை பெற்றுக் கொள்ளாத பட்டத்தினை தனது அலுவலக முத்திரையாகவும், அலுவலக ஆவணங்களிலும் பயன்படுத்துதல், போதிய கால அவகாசம் வழங்காமல் பிரசவ விடுமுறையில் இருந்த மருத்துவர் உட்பட மருத்துவர்களைக் கட்டாய இடமாற்றத்திற்கு உட்படுத்தியது, பூட்டப்பட்டிருந்த மருத்துவ விடுதியை உடைத்துத் தன்னகப்படுத்தியது, போதிய வசதிகள் மற்றும் ஆளணிகள் இன்றி மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளைப் புறக்கணித்து பிரசவ விடுதியை இடமாற்றியது மற்றும் புதிய மருத்துவ சிகிச்சைக் கட்டடத்தைத் திறந்தது ஆகிய குற்றங்களை அர்ச்சுனா புரிந்துள்ளார் என்று மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் மாற்றப்பட்டு புதிய வைத்திய அத்தியட்சகர் நியமிக்கப்பட்டதன் பின்பு வைத்தியசாலை நடவடிக்கைகள் யாவும் சுமுகமான நிலைக்குத் திரும்பியுள்ளன என்றும் அது தெரிவிக்கின்றது.

வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் வைத்தியசாலை விடுதியை மீளஒப்படைக்காமல் அங்கு தங்கியிருந்து வைத்தியசாலைக்குள் வெளியாட்களை அழைப்பது, சமூக வலைத்தளப் பதிவுகளூடாக மக்களை மருத்துவர்களுக்கு எதிராகத் திசை திருப்ப முனைவது, போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது வைத்திய சாலையில் கடமையில் இருக்கும் வைத்தியர்களும் விடுதியில் உள்ள வைத்தியர்களும் சாதாரண செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாது சிரமங்களை ஏற்படுத்துவது என்று மருத்துவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி வருகிறார் எனவும் அறிக்கை கூறுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக மத்திய மற்றும் மாகாண சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் நாம் வைத்தியசாலை நடவடிக்கைகளை சுமுமாக்குவதற்கும் மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் தொழிற்சங்க நடவடிக்கைகள் மீண்டும் மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்கிறது அறிக்கை.

மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு மருத்துவர் அர்ச்சுனா ஏற்கனவே பல நேர்காணல்களில் பதிலளித்துள்ளார். வைத்தியசாலையில் நோயாளர்களின் உணவுத்தரத்தை மேம்படுத்தும் வகையில் அங்கு சமைக்கப்படும் உண்வைச் சுவை பார்ப்பதைத் தான் வழக்கமாகக் கொண்டிருந்தார் என்றும், மருத்துவர்கள் சமூக வலைத் தளத்தைப் பயன்படுத்தியது அரச ஊழியர் தாபன விதிகளுக்கு மாறானதாக இருந்தாலும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்போது தன் மீது மட்டுமல்லாது அப்படி சமூக ஊடகங்களைப் பயன்படுத்திய அனைத்து மருத்துவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் கொழும்பு சுகாதார அமைச்சிலிருந்து தனக்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்ட பின்னர் தனக்கு வேறு எந்தவிதமான அறிவுறுத்தல் கடிதங்களும் அமைச்சிலிருந்து கிடைக்கப்பெறவில்லை என்றும், தனக்கு வேறு தங்குமிடம் இல்லாத காரணத்தால் வைத்திய சாலை விடுதியில் தான் தங்கியிருக்கிறார் என்றும் கர்ப்பிணி மருத்துவர் தனது பிரசவகால விடுமுறையைத் தொடர்வதற்கு ஏற்ற வகையிலேயே அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது என்றும், அதுவும்கூட மருத்துவமனைக்கு அவசியமான ஆளணியைப் பெறும் நோக்கத்தோடு செய்யப்பட்டது என்றும், பணியாற்றிய மருத்துவர் ஒருவர் தொடர்பில் இளம் பெண் ஒருவரின் பெற்றோரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற வாய்மூல முறைப்பாட்டைத் தொடர்ந்து மருத்துவமனையின் பின்புறத்தில் தனித்திருந்த பகுதியில் இயங்கிவந்த உடற்கூறாய்வு மருத்துவரின் அலுவலகத்தை மருத்துவமனையின் முன்புறமாக மாற்றும்படி உத்தரவிட்டார் என்றும் விளக்கமளித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைகள் குறித்து மருத்துவர்களுடன் சுமுகமாகப் பேசித் தீர்க்கத் தான் தயாராக இருக்கின்றபோதும் அவர்களே அதற்குத் தயாராக இல்லை என்றால் தன்னால் உதவ முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொருட்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏப்ரல் மாதத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் ஜூலை மாதம் திருத்தம் செய்ய இணக்கம் காணப்பட்டது. புதிய மின் கட்டணத் திருத்தம் ஜூலை 16 முதல் அமுலுக்கு வந்துள்ளது.

அடுத்த கட்டணத் திருத்த முன்மொழிவை ஒக்டோபர் மாதத்தில் வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது. மின் கட்டணக் குறைப்புக்கு பல முக்கிய காரணங்கள் உள்ளன. 2022இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், கடந்த காலங்களில் வங்கி வட்டி விகிதம் 36% வரை அதிகரித்தது. ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே போர் நிலவி வருவதால், நிலக்கரி மற்றும் உலை எண்ணெய் (ஃபர்னஸ் ஆயில்) விலையும் அதிகரித்தது. அமெரிக்க டொலரிற்கு செலுத்த வேண்டிய தொகை அதிரடியாக உயர்ந்தது. இதன்படி, 9 வருடங்களின் பின்னர் மின் கட்டணத்தைத் திருத்தியமைக்க வேண்டியிருந்தது. 2014 இற்குப் பிறகு, ஒகஸ்ட் 2022 இல் மின் கட்டணம் திருத்தப்பட்டது.

கடந்த இரண்டு வருடங்களைப் பொருத்தவரை, மழை வீழ்ச்சியும் அதிகரித்துள்ளது. அதனால், நீர் மின் உற்பத்தி அதிகரித்தது. மேலும், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியும் அதிகரித்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம், உமா ஓயா நீர்மின் நிலையத்தின் மின்சாரம் தேசிய உற்பத்திக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது. கடந்த 18 மாதங்களில், இலங்கை மின்சார சபை செயற்பாட்டுச் செலவுகளைக் குறைத்துள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் இலங்கை மின்சார சபைக்குள் எந்தவொரு ஊழியரும் புதிதாக இணைத்துக் கொள்ளப்படவில்லை. தேவைப்பாடுள்ள 26,000 ஊழியர்களுக்குப் பதிலாக, இன்று 22,000 ஊழியர்கள் மாத்திரமே உள்ளனர்.

செயற்பாட்டுச் செலவுகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க முடிந்தது. குறைந்த அளவு மின்சாரம் பயன்படுத்தும் மக்களுக்கு இந்த மின் திருத்தத்தின் மூலம் அதிக நிவாரணம் கிடைத்துள்ளது. 79% வீடுகள் 90 அலகுகளிற்கும் குறைவான மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றன. அவர்களுக்கு பெருமளவு நிவாரணம் கிடைத்துள்ளது. மின்கட்டணம் அதிகரித்தபோது ஒரு மின் அலகு உற்பத்திச் செலவு சுமார் 48 ரூபாய். இன்று முப்பத்தைந்து ரூபாய் என்ற நிலையை எட்டியுள்ளது. உணவகங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு 25% - 26% வரை நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. மத வழிபாட்டுத் தலங்களுக்கு 30% குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஆளும்தரப்பு, மின் கட்டணத்தைத் திருத்த முன்னர் நடைமுறையில் இருந்த கட்டணத்தைவிடக் குறையும் வகையில் இந்த திருத்தத்தில், கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

மின் உற்பத்திச் செலவைக் குறைத்தால்தான் எதிர்காலத்தில் மின் கட்டணத்தைக் குறைக்க முடியும். அதற்கு குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய மின் உற்பத்தி நிலையங்களை விரைவாக அமைக்கவேண்டும். இந்தப் புதிய மின் உற்பத்தி நிலையங்களை அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் நிர்மாணித்து முடிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி, அடுத்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மின் கட்டணத்தை, இதனை விடக் குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 180 அலகுகளுக்கு மேல் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் 189,000 பேர் மாத்திமே உள்ளனர். 30 அலகுகள் பயன்படுத்தும் வாடிக்கையாளர்கள் 290 ரூபா மட்டுமே செலுத்தவேண்டும். நீங்கள் 1 - 60 அலகுகளை பயன்படுத்தினால், நீங்கள் 790 ரூபா செலுத்தினால் போதுமானது.

இந்த மின்கட்டணத் திருத்தத்தில் தொழிற்சாலைகள் மற்றும் சிறு வர்த்தகங்களுக்கு குறைந்தபட்சம் 20% விலை குறைக்கப்பட்டுள்ளது. மின்சார விலை அதிகரிக்கப்பட்ட அதே தினத்தில் அதிகரிக்கப்படும் உணவுப் பொருட்களின் விலைகளையும் வர்த்தக நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் சேவைக் கட்டணங்களையும் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். சமீபகாலமாக எரிபொருள் விலையும் மண்ணெண்ணெய் விலையும் குறைந்துள்ளது. அந்தச் சந்தர்ப்பங்களிலும், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் குறைவதை நாம் காணவில்லை. எனவேதான் இம்முறை மின்சாரத்தின் பெரும் கட்டணக் குறைப்பின் பலனை மக்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். குறைந்தபட்சம் 20% விலையைக் குறைக்க முடியும்.

மின்கட்டண அதிகரிப்பின்போது, எமது பிராந்திய நாடுகளின் மின் கட்டணம் குறித்து ஊடகங்கள் அதிகம் கதைத்தன. எனவே இம்முறை கட்டணக் குறைப்பு தொடர்பிலும் பிராந்திய மின் கட்டணம் மற்றும் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவது தொடர்பிலும் ஊடகவியலாளர்கள் ஒரு கருத்தாடலை உருவாக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தேர்தல் காலம் காரணமாக இந்த விலைத் திருத்தம் செய்யப்பட்டதாக சில ஊடக நிறுவனங்களும் ஊடகவியலாளர்களும் தெரிவிக்கின்றனர். ஆனால் இந்த கொள்கைகளை நாம் 2022இல் தயாரித்தோம்.

அதன்படி, சிறப்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் காரணமாக இந்தத் திருத்தம் சாத்தியமாகியுள்ளது. நாங்கள் பிரபலமான முடிவுகளை எடுக்கவில்லை. சரியான கொள்கைகளின் அடிப்படையில் இவை அனைத்தையும் செய்ய முடிந்துள்ளது. மின் கட்டணத்தை உயர்த்தும்போது, ஜனாதிபதிக்கும், ஆளும்தரப்பிற்கும் வழங்கப்படும் விளம்பரத்தைப் போன்று, விலை குறைக்கப்பட்டாலும், அதே விளம்பரத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில் செயல்திறன் மற்றும் குறைந்த செயற்பாட்டுச் செலவுகள் கொண்ட உற்பத்தித் திட்டத்தை அறிமுகப்படுத்த நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். 2022 ஆம் ஆண்டுக்கு முன்னர், மின்சாரத் துறை நட்டத்திலேயே இயங்கியது. ஆனால் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில், செயற்பாட்டு இலாபத்தை பதிவு செய்ய முடிந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டுடன் மின்சார சபைக்கு இதுவரை கிடைத்து வந்த நிதி கிடைக்காமல் தடைப்பட்டது. எனவே, மின்சார சபை இலாபம் ஈட்டும் நிலையை எட்ட வேண்டியதாயிற்று. எனவே, நிதி ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து செயற்பாட்டு இலாபத்தைப் பெற முடிந்தது. அதன்படி கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதல் திறைசேரியில் இருந்து மின்சார சபை எந்த நிதியையும் பெற்றுக்கொள்ளவில்லை.

மின்சார சபை ஏனைய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கடனில், பெரும் தொகையை மீளச்செலுத்தியுள்ளது. சூரிய மின்சக்தித் தகடுகளைப் பொருத்தும் மக்களை ஊக்குவிக்க ஆளும் தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. கூரை மேல் பொருத்தப்பட்ட சூரிய மின்கலங்கள் மூலம் ஆண்டுக்கு 150 மெகாவாட் மின்சாரத்தை தேசிய மின்கட்டமைப்பிற்கு வழங்க திட்டமிடப்பட்டது. இதுவரை சூரிய சக்தி கட்டமைப்புக்கள் மூலம் 149 மெகாவாட் மின்சாரத்தைப் பெற முடிந்துள்ளது - என்றார்.

## வடக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஜூலை 15 இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை நூலகத்திற்குத் தேவையான ஆங்கில நூல்களைக் கொள்வனவு செய்வதற்கு பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கிவைக்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்ததாவது:

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# மூதூர் - பெரியவெளி அகதி முகாம் படுகொலையின் 38ஆவது நினைவு



மூதூர் பிரதேசத்தின் தெற்கு பகுதியின் ஏ15 பிரதான வீதி மல்லிகைத்தீவு சந்தியின் ஊடாக செல்கையில் 500 மீற்றர் தொலைவில் மணற்சேனை, பெருவெளி கிராமங்கள் அமைந்துள்ளன.

1985 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது இம் மக்கள் இடம் பெயர்ந்து பின் மீள குடியேறி அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் 1986 ஆம் ஆண்டு ஜூலை மாதம் விடுதலைப் புலிகள் அமைப்பால் மல்லிகைத் தீவு சந்தியில் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடி தாக்குதலில் மூதூர் சென்று திரும்பிய தெகிவத்தை, சேருநுவர ஆகிய இராணுவ முகாம்களை சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இச் சந்தர்ப்பத்திலும் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து ஒரு சில நாள்களின் பின் மீண்டும் தமது வீடுகளுக்கு வந்து வசிக்கத் தொடங்கியதுடன் சில குடும்பங்கள் பெருவெளி பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாமிலும்; தங்கி இருந்தனர். அத்தோடு இவ் அகதி முகாமில் பாரதிபுரம், மல்லிகைத்தீவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 75 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாடசாலை கட்டடத்திலும் அவ் வளாகத்தினுள் ஓலைக் கொட்டில்கள் அமைத்தும் தங்கி இருந்தனர்.

இவ்வாறானநிலையில்கண்ணிவெடிசம்பவம்நடைபெற்று ஒரு மாதம் கழித்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு பழி தீர்க்கும் முகமாக 1986.07.16 அன்று அதிகாலை 03.00 மணியளவில் மணற்சேனை பெருவெளி ஆகிய கிராமங்கள் கட்டைபறிச்சான் , மூதூர், தெகிவத்த, சேருநுவர ஆகிய இராணுவ முகாம்களைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினராலும், ஊர்காவல் படையினராலும் சுற்றி வளைக்கப்பட்டன. அதன்பின்னர் வீடு வீடாக புகுந்த இராணுவத்தினர் வீட்டில் பயத்தில் உறைந்து இருந்த ஆண்களை ஒவ்வொருவராக சுட்டுக் கொலை செய்து கொண்டு வந்தனர். அதிகாலை நேரம் நாய்கள் குரைப்பது சந்தேகத்தை ஏற்படுத்தியதால் சில ஆண்கள் ஓடி ஒளிந்து கொண்டனர். இவ்வாறு தமது கொலை வெறியை ஆரம்பித்த இராணுவத்தினரும் ஊர்காவல் படையினரும் பெருவெளி அகதி முகாமில் தஞ்சம் அடைந்திருந்த மக்களை சுற்றிவளைத்து அங்கிருந்த 17 ஆண்களை ஒன்று திரட்டி ஓர் இடத்தில் முழந்தாழிட வைத்து குடும்பத்தினர் கண் எதிரே சுட்டுக் கொன்று குவித்தனர். அகதி முகாம் மரண ஓலமாக மாறியது. இவ்வாறு தமது கொலைத் தாண்டவத்தினை காலைவரை அரங்கேற்றிய இராணுவத்தினர் அகதி முகாமில் படுகொலை மேற்கொண்டதனை மறைப்பதற்கான திட்டத்தினை தீட்டி அகதி முகாமில் படுகொலை செய்யப்பட்ட 17 அப்பாவி ஆண்களின் சடலங்களை தமது இராணுவ வாகனத்தினைக் கொண்டு ஏற்றி கட்டைபறிச்சான் இராணுவ முகாமிற்கு எடுத்துச் சென்றனர்.

இராணுவத்தினர் வெளியேறிய பின் பெருவெளி, மணற்சேனை கிராமங்களில் இருந்து 25 ஆண்களின் சடலமும் 02 பெண்களின் சடலமும் மீட்கப்பட்டு மணற்சேனை இந்து மயானத்தில் ஓர் பெரிய குழி அகழப்பட்டு மாலை 05:00 மணியளவில் அடக்கம் செய்யப்பட்டன. பின் அகதி முகாமிலிருந்து கொண்டு செல்லப்பட்ட 17 ஆண்களின் சடலங்களும் 1986.07.18 அன்று பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இச் சடலங்கள் இந்து மயானத்தில் ஓர் குழியில் அடக்கம் செய்யப்பட்டன. இப் படுகொலை சம்பவத்தில் 42 ஆண்கள், 02 பெண்கள் உட்பட 44 அப்பாவிப் பொது மக்கள் பரிதாபகரமாக படுகொலை செய்யப்பட்டனர்.

அத்துடன் குறித்த தினத்தில் அங்கிருந்த 11 பேரை கைது செய்து அழைத்துச் சென்றனர். இவர்களில் 8 பேர் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டதோடு 3பேர் சிறையில் அடைக்கப்பட்டு சில வருடங்களின் பின் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் அப்போது திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கௌரவ. இரா. சம்பந்தன் அவர்களும். அ.தங்கத்துரை அவர்களும் அரச உயர்மட்டங்களுடன் கலந்துரையாடி பல உதவிகளை செய்திருந்தார்கள் அத்துடன் இந்து இளைஞர் பேரவையும் அதன் பொதுச் செயலாளரான சிவபாதசுந்தரம் அவர்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உடனடித் தேவைகளை செய்திருந்தார்கள்.

**இப்படுகொலை சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் பெயர் விவரம்:**

இராசையா செல்லத்துரை - பாரதிபுரம், ஆரியத்தம்பி சிவசுப்ரமணியம் - பாரதிபுரம், சித்திராவி கனகய்யா - பாரதிபுரம், முத்துக்குமார் சிவநாயகமூர்த்தி - பாரதிபுரம், இராசையா குமாரதுரை - பாரதிபுரம், வேலுப்பிள்ளை ஆறுமுகம் - மல்லிகைத்தீவு, கோணாமலை இராசநாயகம் - மல்லிகைத்தீவு, கதிரவேல் நாகேந்திரம் - மல்லிகைத்தீவு, கோணாமலை வீரக்குட்டி - மல்லிகைத்தீவு, கதிர்காமதம்பி வைரக்குட்டி - மல்லிகைத்தீவு, வெற்றிவேல் குணசிங்கம் - மல்லிகைத்தீவு, சித்திரவேல் குணசிங்கம் - மல்லிகைத்தீவு, சித்திரவேல் ஜெகன் - மல்லிகைத்தீவு, சித்திரவேல் பத்தக்குட்டி - மல்லிகைத்தீவு, ஆலப்பிள்ளை - மல்லிகைத்தீவு,

செல்லையாசுந்தரலிங்கம் - மல்லிகைத்தீவு, பொன்னையா - மல்லிகைத்தீவு, மாரிமுத்து சிறிகந்தராசா - மல்லிகைத்தீவு, வைரமுத்து வைரக்கட்டயன் - மல்லிகைத்தீவு, மாரிமுத்து யோகராசா - மல்லிகைத்தீவு, சி. மகேந்திரன் - மணற்சேனை, வீரக்குட்டி மயில்வாகனம் - மணற்சேனை, செல்லையா சித்திரவேல் - மணற்சேனை, வடிவேல் நவரெட்;ணராசா - மணற்சேனை, இராசகுலம் - மணற்சேனை, வைரமுத்து குணசேகரம் - மணற்சேனை, அழகுதுரை சத்தியசீலன் - மணற்சேனை, செல்லத்தம்பி தர்மராசா - மணற்சேனை, கந்தவனம் கமலம் - மணற்சேனை, சிவசுப்ரமணியம் யோகதாஸ் - மணற்சேனை, பத்தக்குட்டி கனகநாயகம் - மணற்சேனை, மகேந்திரன் - மணற்சேனை, சின்னத்துரை குணநாயகம் - பெரியவெளி, கந்தையா தங்கராசா - பெரியவெளி, காளிக்குட்டி அருளம்பலம் - பெரியவெளி, பசுபதி மோகனதாஸ் - பெரியவெளி, சேதுநாதன் கோணாமலை - பெரியவெளி, தம்பிமுத்து தங்கராசா - பெரியவெளி, தியாகராசா வடிவேல் - பெரியவெளி, நாகராசா சரஸ்வதி - பெரியவெளி, பத்தக்குட்டி மகாலிங்கம் - பெரியவெளி, பத்தக்குட்டி யோகராசா - பெரியவெளி, பிரான்சிஸ் மார்டின் - இருதயபுரம், அரசரெட்டினம் ஆலப்பிள்ளை - புன்னையடி, ஈச்சிலம்பற்று.

மூதூர் - பெரியவெளி அகதி முகாமில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தின் 37 ஆவது நினைவுநாள் நிகழ்வு பாதிக்கப்பட்ட மக்களினால் நேற்று(செவ்வாய்க்கிழமை) பெரியவெளி கிராமத்தில் நினைவுகூரப்படுகின்றது.

மூதூர் பெரியவெளி பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாமில் பாதுகாப்புத்தேடி தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்கள் 40இற்கு பேருக்கு மேற்பட்டவர்கள் ஆயுத தாரிகளினால் சுட்டும், வெட்டியும், எரித்தும் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள் இவர்களின் ஆத்மசாந்தி வேண்டி அப்பகுதி மக்களால் நேற்று (செவ்வாய்க்கிழமை) நினைவுநாள் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை-மட்டக்களப்பு ஏ15 பிரதான வீதியின் மல்லிகைத்தீவு சந்தியில் இருந்து 500 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பெரியவெளி பாடசாலை அகதிமுகாமில் பாரதிபுரம், மல்லிகைத்தீவு, மணற்சேனை, பெரியவெளி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 75 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாடசாலை கட்டிடத்திலும் அவ் வளாகத்தினுள் ஓலைக் கொட்டில்கள் அமைத்தும் தங்கி இருந்தனர். 1986 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் திகதி அதிகாலை 03:00 மணியளவில் மணற்சேனை, பெரியவெளி ஆகிய கிராமங்களில் இருந்த மக்கள் 300 இற்கும் மேற்பட்ட ஆயுததாரிகளினால் சுற்றி வளைக்கப்பட்டு சுட்டும் வெட்டியும் எரித்தும் படுகொலை செய்யப்பட்டிருந்தார்கள். இப் படுகொலை சம்பவத்தில் 02



பெண்கள் உட்பட 44 அப்பாவிப் பொதுமக்கள் பரிதாபகரமாக உயிரிழந்தார்கள்.

கிராமத்துக்குள் நுழைந்த ஆயுததாரிகளினால் வீடுகளில் இருந்தவர்களில் 25 ஆண்களும் 2 பெண்களும் படுகொலை செய்யப்பட்டதுடன் பெருவெளி அகதி முகாமில் தஞ்சம் அடைந்திருந்த மக்களை சுற்றிவளைத்து அங்கிருந்த 17 ஆண்களை ஒன்று திரட்டி ஓர் இடத்தில் முழந்தாழிட வைத்து குடும்பத்தினர் கண் எதிரே சுட்டுக் கொன்றனர்.

அத்துடன் குறித்த தினத்தில் அங்கிருந்த 11 பேர் கைது செய்து அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்கள் இவர்களில் 8 பேர் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டதோடு 3பேர் சிறையில் அடைக்கப்பட்டு சில வருடங்களின் பின் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்டவர்களது 17 பேரின் சடலங்களும் கட்;டைபறிச்சான் ஜிபிஎஸ் இராணுவ முகாமில் வைத்து பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.(05)

# 4 சிறுவர்களை காணவில்லை

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் லூசா தோட்டத்தைச் சேர்ந்த நான்கு சிறுவர்கள் காணாமல் போயுள்ளார்கள்.

முரளிகிருஷ்ணன் லக்சிக்கா (வயது 16), ராஜகுரு மிதுஷா (வயது 16), சுந்தர்ராஜ் தர்ஷினி (வயது 16), சிறுவன் ராஜகுரு கோபிசாகர் (வயது 15) ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை வீட்டிலிருந்து வெளியே சென்றவர்கள் வீடு திரும்பவில்லை.

இந்நிலையில், அவர்களின் பெற்றோர்களால் முறைப்பாடு ஒன்று திங்கட்கிழமை தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நான்கு சிறுவர்கள் தமது பெற்றோர்களுக்கு சொல்லாமல் வீட்டிலிருந்து வெளியே சென்று காணாமல் போயுள்ளதாக பெற்றோர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தொடர்பில் தகவல் தெரிந்தால் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு 0764612289, 0771546724 தொடர்புகொள்ளுமாறு பெற்றோர்கள் உதவி கோரியுள்ளனர். (05)

# அயகமவில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஒருவர் பரிதாபச் சாவு

## பொலிஸார் விசாரணை

அயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருபொருவ பகுதியில் தலையில் பலத்த காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபரொருவர் உயிரிழந்துள்ளதாக அயகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

எருபொருவ, உஸ்வத்தை பகுதியில் வசிக்கும் 50 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின் போது, உயிரிழந்தவர் வீட்டில் தனிமையில் இருந்துள்ளதுடன் மனைவியும் மகனும் வெளியே சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரது சடலம் பிரேதப்பரிசோதனைக்காக அயகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் அயகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## விலைக்குறைப்பின் பயன் மக்களுக்குக் கிட்டட்டும்

**மின்சாரக் கட்டணங்கள் சராசரியாக 22.5 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருக்கின்றன. 2022க்கும் பின்னர் ஆளும் தரப்பு மேற்கொண்டிருக்கக்கூடிய மிக முக்கியமான அடைவாக இதனைக் கொள்ளமுடியும். தேர்தல்கால கவர்ச்சிகர அறிவிப்பாக மட்டும் இது இல்லாத நிலையில் இலங்கையின் பொ–ருளாதார நிலமை இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான முக்கிய அறிகுறியாக இதனைக்கொள்ளலாம்.**

**பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் இருந்த மின்சாரக் கட்டணத்திற்கு இணையாக இந்தக் குறைப்பு இல்லை என்றாலும் திடீரென கழுத்தை நெரித்த மின்சாரக் கட்டணத்தில்இருந்துதனிநபர்களுக்கும்சிறுமற்றும்நடுத்தர நிறுவனங்களுக்கும் ஒரு நிவாரணம் கிடைத்திருக்கின்றது என்பதென்னவோ உண்மைதான். திடீரென எகிறிய மின் கட்டணங்கள் வானத்திலிருந்து இறங்கிவந்திருப்பது மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியதொன்றுதான். எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணம் ஆகிய இரண்டும் குறைக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் அதனால் நிச்சயம் பயனடைவர்.**

**இருப்பினும் அதன் பயனை அவர்கள் முழுமையாக அனுபவிப்பதாயின் மின்சாரக்கட்டணம் மற்றும் எரிபொருள் ஆகியவற்றில் தங்கியிருந்த பொருட்கள் சேவைகளின் கட்டணங்களும் குறைக்கப்படுவது மிக அவசியம்.**

**மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்பட்டிருப்பதை அடுத்து பொருட்கள் மற்றும் சேவைக் கட்டணங்களையும் 20% சதவீதத்தினால் குறைக்க முடியும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். அவரது ஆதங்கம் நியாயமானது. நடைமுறைப்படுத்தப்படவேண்டியது.**

**மின்சாரக்கட்டணம் மற்றும் எரிபொருட்களின் விலைகள் சடுதியாக உயர்ந்தபோது எல்லாப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் பின்னர் மின்சார மற்றும் எரிபொருள் கட்டணங்கள் குறைகின்றபோது அவற்றின் வேகத்திற்கேற்ப குறைவதில்லை என்பது என்னவோ உண்மைதான்.**

**”இந்த மின் கட்டணத் திருத்தத்தில் தொழிற்சாலைகள் மற்றும் சிறு வர்த்தகங்களுக்கு குறைந்தபட்சம் 20% விலை குறைக்கப்பட்டுள்ளது. மின்சார விலை அதிகரிக்கப்பட்ட அதே தினத்தில் அதிகரிக்கப்படும் உணவுப் பொருட்களின் விலைகளையும் வர்த்தக நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் சேவைக் கட்டணங்களையும் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். சமீபகாலமாக எரிபொருள் விலையும் மண்ணெண்ணெய் விலையும் குறைந்துள்ளது. அந்தச் சந்தர்ப்பங்களிலும், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் குறைவதை நாம் காணவில்லை. எனவேதான் இம்முறை மின்சாரத்தின் பெரும் கட்டணக் குறைப்பின் பயனை மக்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். குறைந்தபட்சம் 20% விலையைக் குறைக்க முடியும்” என்று அமைச்சர் காஞ்ச தெரிவித்தார்.**

**வரிசை யுகத்தில் இருந்து மக்களுக்கு விடுதலை கிடைத்தது என்பது மக்களின் மனங்களில் பொருளாதார ரீதியில் பெரும் மாற்றத்தை அல்லது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மாற்றமல்ல. அதேநேரம் விலைக் குறைப்பு அவர்கள் உணரக்கூடிய விதத்தில் இருக்கும்போது, அதன் பயனை அவர்கள் அடையும்போது அது அவர்களால் உணரப்படவும் வரவேற்கப்படவும் கூடியது. எனவே பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளைக் குறைக்கும்படி கோரிக்கைகளை விடுப்பதற்கு அப்பால் அவற்றைக் குறைப்பதற்கு வேண்டிய அரச நடவடிக்கைகளை இந்த ஆளும் தரப்பு மேற்கொள்ளவேண்டும்.**

**விரைவிலேயே அந்த விலைக் குறைப்பு இடம்பெறுவதை உறுதிப்படுத்தவேண்டும். அப்போதுதான் மக்கள் கட்டணக் குறைப்பின் பயனை அனுபவிக்கமுடியும்.**

# ஆடி மாதம் அமங்கலம் அல்ல அம்மனின் மாதம்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா

நம்பிக்கையின்அடிப்படையில்த்தான்நாம்நாளும் பொழுதும்யாவற்றையும் செய்து வருகின்றோம். சம யத்தில் நம்பிக்கை. தத்துவத்தில் நம்பிக்கை. புராண , இதிகாசகங்களில் நம்பிக்கை. முன்னோர் மொழி ந்த மொழிகளில் நம்பிக்கை. கற்றறிந்தவர் எழுதும்நூல்களில்நம்பிக்கை. அவர்கள் ஆற்றுகின்ற உரைகளில் நம்பிக்கை . இவற்றை எல்லாம் விட சமுகத்தில் நிலவுகின்ற நம்பிக்கை. இப்படியாக நமது வாழ்வில் நம்பி க்கை எனும் பொழுது பல பரிணாமங்களில் அமைந்திருப்பதைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இதன் அடிப்படையில் பனிரெண்டு மாதங்கள் பற்றிய நம்பிக்கை எப்படி இருக்கிறது என்பதை நோக்குவதும் மிகவும் முக்கியமானதாயிருக்கிறது.



பனிரெண்டு மாதங்களும் வருகின்றன. போகின்றன. சில மாதங்களை சிறப்பென்றும் , சிலவற்றை ஒதுக்கிப் பார்ப்பதும் இயல்பாகி விட்டது. ஆனால் அப்படி ஒதுக்க வேண்டியது - மனத்தில் எழுகின்ற ஒரு வித மயக்கம் என்றே எண்ண வேண்டி இருக்கிறது. எல்லா மாதங்களும் ஏதோ ஒரு விதத்தில் சிறப்புக் களைத் தன்னகத்தே கொண்டு தான் வருகின்றன.மார்கழியைப் பீடை பிடித்த மாதம் என்கிறோம். புரட்டா சியையும் ஒரு பக்கம் தள்ளியே வைக்கிறோம் .ஆடியை மங்கலம் அற்ற மாதம் என்கிறோம். பங்கு னியை, சித்திரையை, தையை, ஆவணி யைக் கொண்டாடி வரவேற்கிறோம்.இப்படி நோக்குவது எங்களிடம் இயல்பாகி விட்ட நிலையில் ; மங்கலம் இல்லா மாதமாக எடுத்துக் கொள்ளும் ஆடி எங்களை நாடி வரு கிறது ! வருகின்ற ஆடியை விட்டு விட்டு விலகத்தான் எங்களால் முடியுமா ? முடியவே முடியாது ! நாடி வரும் ஆடி பற்றி பார்ப்போமா வாருங்கள் !

ஆடி என்றவுடன் – ஆடிச்செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடிப்பூரம், ஆடிக்கார்த்திகை, ஆடித்தபசு, ஆடிப் பெரு க்கு, ஆடி அமாவாசை, ஆடி பௌர்ணமி , என்று இறை வழிபாட்டுடன் இணைந்ததாக ஆடி மாதம் முழுவ தும் அமைந்திருப்பதை நாமனைவரும் மனமிருத்த வேண்டியது அவசியம். ஆடி மாதத்தை அம்மனின் மாதம் என்பதையும் அகமிருத்தல் மிகவும் அவசியமேயாகும்.அப்படி இருக்க ஆடியை நாடாமல் ஒதுக்கிப் பார்ப்பது முறையா ?



மார்கழியில் திருவெம்பாவை வருகிறது. திருப்பாவையும்,மணிவாசகரின்திருவெம்பாவையும் மார்கழி யில் கோவில்களில் பக்தி சிரத்தையுடன் பாடப்படுகிறது. வைணவர்களும் , சைவர்களும் கொண்டாடும் மாதமாய் மார்கழி இருக்கிறது. மாதங்களில் நான் மார்கழி என்று கீதையில் கண்ணனே சொல்லுவதை யும் கருத்திருத்த வேண்டும். புரட்டாசியில் நவராத்திரி வருகிறது. கலைகளைப் போற்றும் விழாவாகக் கொண்டாடப் படுகிறது.சமயமும்கலைகளும்சங்கமிக்கும்மாதமாய் புரட்டாசி விளங்குகிறது. ஆடி, புரட் டாசி, மார்கழி இறைவழிபாட்டுக்குரிய மாதங்களாகும். அப்படி என்றால் மற்றைய மாதங்கள் இறை வழி பாட்டுக்கு ஏற்றன அல்லவா என்று வினா எழுகிறதல்லவா ? ஆடி, புரட்டாசி , மார்கழி மாதங்களில் மங்க லமான நிகழ் வுகளான - வீடு குடுபுகுதல், திருமணம், திருமண நிச்சயார்த்தம், காது குத்தல், எதையும் செய் வதில்லை. காரணம் - இம்மாதங்கள் தேவர்களுக்கு உரிய மாதங்கள்.மனிதர்களுக்கும் அவர்களின் இன்ப ங்களுக்கும் உரிய மாதங்கள் அல்ல என்பதுதான் காரணம்.

சூரியனை அடிப்படையாகக் கொண்ட மாதங்கள்தான் நம்முடைய தமிழ் மாதங்கள்.கடக ராசியில் சூரி யன் சஞ்சரிக்கும் காலம்தான் ஆடி மாதம்.ஆடி மாதம் தொடங்கி மார்கழி மாதம் வரையான ஆறு மாதங்களும் சூரியன்–தன்னுடைய வடக்கு நோக்கிய பயணத்தை முடித்துக் கொண்டு தெற்கு நோக்கி பய ணிக்கிறார்.தெற்கு என்பது பித்ருக்களுக்கு உரிய திசையாகும். இதனால் இம்மாதத்தை பித்ருக்குகளுக்கு வழி பாடாற்றும் மாதமாயும் கொள்ளும் நிலை ஏற்பட்டது.

மனிதர்களுக்கு ஓராண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும்.ஆடி தொடங்கி மார்கழி வரையான ஆறுமாதங்களும் சூரியனின் தெற்கு நோக்கிய பயணமாகும். தை தொடக்கம் ஆடிவரையான ஆறு மாத ங்களும் சூரியனின் வடக்கு நோக்கிய பயணமாகும்.வடக்கு நோக்கிய பயணக் காலத்தில் வெப்பம் அதிக மாய் இருக்கும்.தெற்கு நோக்கி சூரியன் பயணிக்கும் பொழுது வெம்பம் தணிந்து - காற்று, மழை, பனி என் னும் காலநிலை வந்து நிற்கும். தெற்கு நோக்கிய சூரியனின் பயணக்காலம் தேவர்களுக்கு இராக்கால மாகும். அதாவது ஆடி என்பது தேவர்களின் இராக்கால தொடக்கமாகும். மார்கழி என்பது தேவர்களுக்கு விடியல் காலமாகக் கருதப்படுகிறது. ஆடி இரவின் தொடக்கம். மார்கழி விடியலின் தொடக்கம்.

ஆடியில் சூரியன் கடகராசியில் சஞ்சரிக்கிறார் என்று பார்த்தோம்.கடகராசி என்பது சந்திரனின் ஆட்சி வீடாகும்.சூரியன் சிவனின் அம்சமாகும். அந்தச் சூரியன் சக்தியின் அம்சமான சந்திரனில் சஞ்சாரம் செய் யும் நிலை இக்காலத்தில் அமைகிறது. இதனால் சந்திரனின் ஆளுமை அதிகரிக்கிறது.இப்படி ஆவதால் ஆடி மாதம் என்பது சக்தியின் மாதமாய் விளங்குகின்றது. அக்காரணத்தால்தான் அம்மனின் மாதம் - ஆடி என்று ஆகிவிட்டது. அம்மனு க்கு உகந்த விழாக்கள் இம்மாதத்தில் முக்கியத்துவம் பெறுவது இதனால்த் தானோ என்று எண்ணிட வைக்கிறது.

அறிவியல் வழியில் சிந்திப்பதும் உகந்ததாகும். ஆடி மாதம் காற்றுக் கால மாகும். காற்றினால் பரவும் நோய்கள் அதிகரிக்கும் காலமாகவும் இக்காலம் அமைகிறது. இதனால், வேப்பிலை, மஞ்சள் என்பவற்றை வழிபாடு என்ற வகையில் அம்மனுக்கு உரியதாக்கி நிற்பதும் நோக்கத்தக்கது. அத்துடன் கூழ் காய்ச்சுவ தும் , அம்மனுக்கு வைத்து வழிபடுவது கூட அறிவியலை ஆன்மீகத் துடன் இணைக்கும் நிலையினையே காட்டுகிறது அல்லவா !

ஆடி மாதத்தை கணக்கிட்டுத்தான் பண்டிகை

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# ஆடி மாதம் அமங்கலம் அல்ல அம்மனின் மாதம்

4ம் பக்க தொடர்ச்சி...........

களின் தொடக்கமே அமைகிறது என்பதும் நோக்கத்தக்கது. கிராமங்கள் தோறும் அம்மனுக்குரிய விழாக்கள் நடைபெறுவதும் மனமிருத்த வேண் டியதே.அம்மனைப் பல நிலைகளில் வழிபடுவதும் நோக்கத்தக்கது. காவல் தெய்வமாய் கருதி போற்றி வழிபாடுகளில் ஈடுபடு வதையும் ஆடியில் காணக்கூடியதாய் இருக்கிறது.

ஆடியில் ஆறுகளில் நீர்ப்பெருக்கு வருவதை அனைவரும் கொண்டாடி மகிழ்கின்றார்கள். இதனையே ஆடிப்பெருக்கு என்று அகமகிழ அழைக் கின்றார்கள்.சுமங்கலிப் பெண்கள் தங்களின் தாலிக்கையிற்றை மாற்று வதும், அம்மனுக்கு படையில் வைத்து ஆராதிப்பதும் இவ்வேளை இடம் பெறுகிறது என்பதும் மன ங்கொள்ளத் தக்கதாகும்.

பெண்கள் விரும்பி அனுட்டிக்கும் விரதமான வரலட்சுமி விரதம்ஆவணிமாதத்துக்குரியதாய்இருந்தாலும்,பெரும்பாலன சமயங்களில் ஆடி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் வருகிறது. ஆடி வெள் ளியில் மாரியம்மனுக்கு தேர்திருவிழா, தெப்பத்திருவிழா , தீமிதிப்பு எல்லாம் நடக்கும். அருள் மாரியாய் கருமாரு விளங்கிறாள் அல்லவா ? சின்னக் கோவில்கள், பெரிய கோவில்கள் எல்லாம் இந்த விழாக்கள் நடை பெறு வதும் நோக்கத்தக்கது.

ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசையும் தையில் வருகின்ற அமாவாசையும் கடலில் நீராட உகந்த தினங்களாகும்.தஷிணாயன புண்ணிய காலம், உத்தராயண புண்ணிய காலம் என்று இக்காலங்களைச் சிறப்பித்துச் சொல்லுவார்கள்.

இறைவனை அடைவதற்கு அன்னை பராசக்தி தவம் செய்ததும் ஆடி மாதத்தில்த்தான்.சூடிக்கொடுத்த சுடர்கொடியான ஆண்டாள் நாச்சியார் ஆடியில்த்தான் அவதரிக்கின்றார்.சுந்தரமூர்த்தி நாயனாரை இறை வன் அழைத்துக்கொண்டதும் ஆடியில்த்தான் என்பதும் அகமிருத்த வேண் டிய கருத்தெனலாம்.

தையினை பொங்கல் திருநாளாய், அறுவடைத்திருநாளாய் கொண் டாடுவதற்கு வித்திடப்படுவதே ஆடியி ல்த்தான். ‘ ஆடிப்பட்டம் தேடி விதை ‘ என்னும் பழமொழியே ஆடியில் விதைத்தால்த்தான் தையில் அறு வடை செய்ய முடியும் என்பதைக் காட்டி நிற்கிறதல்லவா ?

ஆடிச்செவ்வாயினைமையமாய்கொண்டு‘ஆடிச்செவ்வாய் தேடிக்குளி - அரைச்ச மஞ்சளைப் பூசிக்குளி ‘ என்னும் முதுமொழி பழக்கத்தில் இருக்கிறது.

ஆடி தெய்வீக மாதம். அம்மனின் மாதம், என்றெல்லாம் போற்றப் பட்டாலும் புதுமணத் தம்பதிகளுக்கு மட் டும் வெறுப்பான மாதமாய் இருக்கிறது. அவர்களுக்கு மட்டும் ஏன் வெறுப்பாய் இருக்கிறது என்பதையும் அறிவதும் அவசியம் அல்லவா ! மணமான தம்பதிகளைப் பிரித்து விடுவார்கள்.அதாவது பெண்ணைப் பிறந்த வீட்டு அனுப்பி விடு வார்களாம். சாஸ்த்திரம் என்று சொன்னாலும் - இங்கே எங்களின் முன்னோ ர்களின் நல்ல சிந்தனையும் கலந்தே இருக்கிறது. ஆடியில் கருவுற்றால் - பத்தாவது மாதமான




சித்தியி ரையில் பிரசவம் நடக்கும். சித்தியிரையில் புத்திரன் பிறந்தால்தந்தைக்குநல்லதல்லஎன்னும்கருத்துசாதரணமாக சமூகத்தில் நிலவுகிறது. இது எந்தளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. சித்திரையில் கத்தரி வெயில் என்பதை அனைவரும் அறிவோம் .வெப்பம் கூடிய காலத்தில் பிரசவம் நடந்தால் கால நிலை காரணமாக பிரசவிக்கும் பெண் பெரும் வேதனைக்கு ஆளாவாள். பிரசவ வேதனையுடன் வெயி லின் கொடுமையும் பெருவேதனையைந் தந்துவிடும் என்பதால் மணப்பெண்ணை பிறந்த வீட்டுக்கு ஆடியில் அனுப்பிய எங்களின் முன்னோர்களின் சிந்தனையினைப் பாராட்டாமல் இருக்கத்தான் முடியுமா?

ஆடி என்றவுடன் எங்கள் தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் கட்டாயம் வந்து நிற்பார்.தாத்தாவின் வர வையும் , அவரின் ஆடிப்பிறப்பு ஆனந்தமான பாடலையும் நினைவுக்குக் கொண்டுவருவதும் நாடிவரும் ஆடி அல்லவா !

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சக்கரையுங்கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு மாவுண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவள்
மணக்க மணக்க வாயூறிடுமே

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் படைப்பும் படைப்போமே

வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே

நாடிவரும் ஆடி அமங்கல மான மாதம் அல்ல ! அது தெய்வீக மாதம் ! கொழுக்கட்டையும் சாப்பிட்டு கூழும் குடித்து மகிழும் காலம். ஆடிப்பட்டம் விட்டு அம்மனை போற்றிக் கொண்டாடி , தோழர்களுடன் பாடி மகிழும் காலமாகும்.

மெஞ்ஞானமும் , விஞ்ஞானமும் இணைந்து மேதினியில் சிறந்து விளங்குவதுதான் ஆடி மாதத்தின் சிறப்பு எனலாம். எங்கள்முன்னோர்கள்எதையும்தக்ககாரணகாரியத்தோடுதான் வகுத்தார்கள். அவர் களின் கணிப்பில் தவறுகளைக் கண்டு பிடிப்பது முறையானதல்ல. தற்காலத்தில் எதற்கெடுத்தாலும்

விதண்டா வாதம் பேசுவது என்பது பெரும் மேதாவித்தனம் ஆகியே விட்டது. ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ்வொரு சிறப்பு இருக்கிறது. சிறப்புக்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதுதான் மிகவும் உகந்த பண்பாடாகும்.

நம்பிக்கைகள்தான் வாழ்வின் ஆணிவேராகும். எமது முன்னோர் கொண்ட நம்பிக்கைகள் , அதற்காக அவர்கள் வகுத்த அற வழிகள் , ஆன்மீக வழிகள் , அத்தனையும் எம்மை என்றுமே வழிநடத்திச் செல் வதற்கு அருந்துணையாக அமைகின்றது என்பதை அகமிருத்துவது அவசியம் அல்லவா!




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# ஆனைக்கோட்டை பூர்வீக – தொன்மையான நாகரிகம் எப்போது ஆரம்பம் என்ற உண்மைகள் வெளிவரும்

## நம்பிக்கை இருக்கின்றது என்கிறார் புஸ்பரட்ணம்



ஆனைக்கோட்டையின் பூர்வீக தொன்மையான நாகரீகம் எப்போதிலிருந்து வளர்ந்துவருகின்றது என்ற உண்மைகள் வெளிவரும் என்ற நம்பிக்கை உள்ளதாக வாழ்நாள் பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதுவரை ஆனைக்கோட்டையில் ஏறத்தாள 9 அடிக்கு மேல் 11 கலாச்சார மண்ணடுக்குகள் கண்டறியப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையின் பூர்வீகக் குடியிருப்பு மையங்கள் பற்றி தென்னாசிய தொல்லியலாளர்களால் அறியப்பட்ட இடங்களில் ஒன்றாக ஆனைக்கோட்டை காணப்படுகிறது.

இதற்கு முக்கிய காரணம் 1980 ஆம் ஆண்டு பேராசிரியர் ரகுபதி அவர்களால் அடையாளப்படுத்தப்பட்டு பின்னர் பேராசிரியர் இந்திரபாலா பேராசிரியர் சிற்றம்பலம் பேராசிரியர் கிருஷ்ணராஜா பல்கலைக்கழக நூலகராக இருந்த ஆ.சிவனேசசெல்வன் ஆகியோரும் மற்றும் பொருளியல் புவியியல் தமிழ்த்துறை ஆசிரியர்கள்தும் மாணவர்களதும் பங்களிப்போடு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக 2300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இரண்டு மனித எலும்பு கூடுகளும் அதன் ஒரு எலும்புக்கூட்டின் தலைமாட்டுப் பகுதியில் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட முத்திரை மோதிரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆனால் அந்த அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து தொல் பொருட்களையும் 1988 ஆம் ஆண்டு நாம் முழுமையாக இழந்துவிட்டோம். கண்டுபிடிக்கப்பட்ட இடத்தை பார்வையிடுவதற்கு பிறர் வருகின்ற போது பெருமையோடு காட்யிஞீக்கொள்ளக்கூடிய அளவுக்கு ஆனைக்கோட்டையின் அகழ்வு இடம் கருத்தில் கொள்ளக்கூடியதாக இன்று வரை இருக்கவில்லை.

இந்த நிலையில்தான் 1980களின் பின்னர் பலரால் ஆனைக்கோட்டையில் அகழ்வு செய்யப்படவேண்டும் என்று விரும்பி இருந்தாலும் அந்த விருப்பம் 44 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பொழுதுதான் நடைமுறைக்கு வந்துள்ளது.

1980களில் இலங்கையில் மட்டுமின்றி தென்னாசியாவிலும் அகழ்வாய்வுக்குரிய நவீன தொழில் நுட்ப வசதிகள் இருக்கவில்லை.

இப்பொழுது நவீன தொழில் நுட்பவசதிகள் பல மாற்றங்களோடு வளர்ச்சி அடைந்துள்ளன. அந்த வசதிகள் அனைத்தையும் நாம் பயன்படுத்துகிறோம் என்று பெருமை கொள்ளாவிட்டாலும் முடிந்த அளவு நவீன வசதிகளையும் வாய்ப்புகளையும் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் ஒரு விஞ்ஞான பூர்வமான மிகப்பெரிய ஒரு அகழ்வாராய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதில் நாம் திருப்தி அடைய இடம் உண்டு.

ஆனைக்கோட்டையில் இந்த அகழ்வாராய்ச்சியானது 20.06.2024 இல் சம்பிரதாய பூர்வமாகத் தொடங்கிய பொழுது அதனை முக்கியப்படுத்தி ஊடகங்கள் பலவற்றில் செய்திகள் வெளிவந்தன. இரண்டு வாரங்கள் கழித்தும் அங்கு என்ன நடக்கிறது என்ற கேள்வி பலருக்கு எழுகின்ற அதே நேரத்தில் ஒன்றும் கிடைக்கவில்லை. அதனால் தான் ஊடகங்களில் அது பற்றிய செய்திகள் வெளியிடப்படவில்லை என்ற விமர்சனங்களும் வருகின்றன.

இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பிருந்து பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள்இ பொது நலன் விரும்பிகள் ஆர்வலர்கள் எனப்பலரும் அங்கு வருகைதந்திருக்கின்றார்கள். அவர்கள் அங்கு வந்து சில புகைப்படங்களை எடுத்து தமது முக நூல்களில் பதிவேற்றம் செய்திருக்கிறார்கள் எனினும் நாங்கள் எங்களுடைய செய்திகளைஇதுவரைஉத்தியோகபூர்வமாகஅறிவிக்கவில்லை.

அதற்கு முக்கிய காரணம் இலங்கைத் தொல்லியல் சட்டத்தில் ஓர் அகழ்வாய்வுக்கு அனுமதி வழங்குகின்ற பொழுது, பன்னிரண்டுக்கும் மேற்பட்ட நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இந்த நிபந்தனைகள் பொதுவானவை. அதில் ஒரு நிபந்தனை அகழ்வாய்வு முடிந்து அதன் பெறுபேறுகள் சரியாக ஆவணப்படுத்துவதற்கு முன்னர் அதுபற்றிய செய்திகளை வெளியிடக்கூடாது என்பதாகும்.

நாங்கள் ஒரு தொல்லியல் ஆய்வாளர் என்ற வகையில் தொல்லியல் கட்டுப்பாடுகளுக்கு கட்டுண்டு நடக்கும் பொருட்டு. நாங்கள் இதுவரை செய்திகளை வெளியிடவில்லை.

எனினும் அங்கு என்ன நடைபெறுகிறது என்பதை பொதுமக்கள் தெரிந்து கொள்வதும் அதை இட்டு ஊடகவியலாளர்கள் மிகுந்த ஆர்வத்தோடு கேள்வி எழுப்புவதும் விசாரணை செய்வதும் எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அவற்றை ஓரளவு பூர்த்தி செய்யும் வகையில் சில விடயங்களை இங்கே நாங்கள் குறிப்பிடக் கூடியதாக இருக்கிறது.

இதுவரை ஆனைக்கோட்டையில் ஏறத்தாள 9 அடிக்கு மேல் 11 கலாச்சார மண்ணடுக்குகள் கண்டறியப்பட்டுள்ளன. நாலாவது கலாச்சாரமண்ணடுக்கில் பெறுமதியான பல தொல்பொருள் சான்றுகள் வருகின்றன.

அந்தத் தொல்பொருள் சான்றுகளை தொடர்ந்து அகழ்வு செய்யப்படுகின்ற போது ஆனைக்கோட்டையில் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட ஆதி இரும்புக்கால அல்லது பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதை உறுதி செய்யக் கூடியதாக இருக்கும்.

அது மட்டுமல்லாமல் முன்னைய ஆய்வுகளில் கிடைக்காத அரியவகையான பல சான்றாதாரங்களும் கிடைக்கின்றன. இதில் அயல் நாடுகளுக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையிலான தொடர்புகளையும் உறவுகளையும் அறியக் கூடிய சான்றுகளும் காணப்படுகின்றன.

இந்த நிலையில் ஆனைக்கோட்டையில் கிடைக்கின்ற சான்றுகளை வைத்து பார்க்கும் போது, 1970களில் விமலா பேக்லி என்ற பெஞ்சில்வேனிய பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர் கந்தரோடையில் அகழ்வு செய்த போது அவற்றின் கண்டுபிடிப்புகளை வைத்து கந்தரோடையில் வாழ்ந்த பூர்வீக மக்கள் தமிழகத்தில் இருந்து வந்திருக்கலாம் அல்லது இங்கு வாழ்ந்த மக்கள் தமிழகத்து மக்களோடு நெருங்கிய



தொடர்பு கொண்டிருக்கலாம். இந்த பண்பாட்டுக்குரிய மக்கள். கந்தரோடையிலிருந்து புத்தளம் வரை பரவி வாழ்ந்திருக்கலாம் என்று ஒரு கருத்தை முன் வைத்தார்.

அந்தக் கருத்தை எமது அகழ்வுகள் மேலும் உறுதி செய்கின்ற அதே நேரத்தில், இந்தப் பண்பாட்டுக்கு முன்னரும் இங்கு மக்கள் வாழ்ந்து இருக்கலாம் என்ற ஒரு சமிக்ஞை அல்லது சில ஆதாரங்கள் கிடைக்கின்ற வாய்ப்புகள் உண்டு.

தொடர்ந்தும் நாங்கள் அகழ்வு செய்யும் பொழுது தான் அவற்றை உறுதிப்படுத்தலாம். இந்த அகழ்வின் போது கண்டறியப்பட்ட சில மாதிரிகளை நாங்கள் நவீன காலக்கணிப்புக்கு உட்படுத்த இருக்கின்றோம்.

அந்தக் காலக் கணிப்புகள் மூலம் ஆனைக்கோட்டையின் பூர்வீக-தொன்மையான நாகரிகம் எப்போதிருந்து வளர்ந்து வருகிறது என்ற உண்மைகள் வெளிவரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அகழ்வாய்வு முடிந்து ஓரிரு வாரங்களுக்குள் நாங்கள் அறிக்கையாக நூலாக தொல்லியல் திணைக்களத்துக்கு சமர்ப்பிப்போம்.அங்கு கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து ஆதாரங்களுக்குமான உண்மைகளை மக்களுக்கும் ஊடகங்களுக்கும் தெரியப்படுத்துவோம்.

அதுவரை இந்த அகழ்வு பற்றி அங்கு கிடைத்த ஆதாரங்கள் பற்றி நாங்கள் வெளியிடுவது தொல்லியல் சட்ட விதிகளுக்கு முரணானது என்பதனால் அதை நாங்கள் மதித்து இந்த அகழ்வை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம்.

புலம்பெயர் நிதிப்பங்களிப்புடனும் யாழ்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடனும் இந்த அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது குறிப்பாக 2019ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த 1980 ஆய்வுகளின் பங்கெடுத்தவரான வரலாற்றுத்துறையின் விரிவுரையாளராக அப்போதிருந்த சுப்பிரமணியம் விசாகன், தற்போது இலண்டனில் வசிப்பவர், இவ்விடத்தில் மீண்டும் ஓர் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் இவ்விடம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை முன்வைத்தார் தற்போது இவ் எண்ணம் நிறைவேறி வருவதைக் காணலாம்.

இவ்வாய்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக தொல்லியல்துறையின் நான்காம் மூன்றாம் இரண்டாம் வருட மாணவர்கள்மற்றும்யாழ்ப்பாணதென்னிலங்கைதொல்லியல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் விரிவுரையாளர்கள் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் ஆர்வத்துடன் பங்கு பற்றி வருகின்றனமை மகிழ்ச்சி அளிக்கின்றது - என்றார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரியான திட்டமிடல் ஊடாக, சரியான தொலைநோக்கு பார்வையில் மிக இலகுவாக கட்டியெழுப்பக்கூடிய மாவட்டமாக இந்த மன்னார் மாவட்டத்தை நான் பார்க்கின்றேன். இங்கு 5 பிரதேச செயலகப் பிரிவுகள், 153 கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் 382 கிராமங்கள், குக்கிராமங்கள் காணப்படுகின்றன. மன்னாரின் எதிர்கால அபிவிருத்திக்காக மன்னாருக்கு தனியான ஜனாதிபதி செயலணியொன்றை உருவாக்குவேன்என்றுஎதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எமது ஜனாதிபதி செயலனி ஊடாகஐந்துபிரதேசசெயலகத்திலும் 5 பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பேன். அடிமட்டத்தில் இருந்து பெறப்படும் கருத்துக்கள், ஆலோசனைகளின்படி வகுக்கப்படும்மக்களைமையமாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுப்பேன். இதன் ஊடாக மீன்பிடி, சுற்றுலா கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் போன்ற துறைகளைப் பலப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். இவர்களை இணைத்துக் கொண்டு மன்னார் மாவட்டத்தைக் கட்டியெழுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தின் பாடசாலைகளுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் எமது இந்தப் பிரபஞ்சம்நிகழ்ச்சித்திட்டத்தின்ஊடாக சேவையாற்ற முடிந்தமை குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். இந்நாட்டின் 76 ஆண்டுகால வரலாற்றில் முன்னெடுக்கப்பட்ட சம்பிரதாய திட்டம் என்று இந்த பிரபஞ்சம் திட்டத்தைக் கூற முடியாது. அரச நிதிகளால் இந்த திட்டங்கள் எம்மால் முன்னெடுக்கப்படவில்லை. நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நன்நோக்கில் எமக்கு வழங்கப்படும் நன்கொடையாளர்களின் பங்களிப்பிலயே இந்த திட்டத்தை முன்னெடுத்துவருகிறோம்என்றார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பின் 83 ஆம் உறுப்புரையின் (ஆ) பந்தியைத் திருத்தம்செய்வதற்காக 2024.07.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தைஅரசவர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதற்கும் கௌரவ ஜனாதிபதியும், நீதி, சிறைச்சாலை அலுவல்கள்மற்றும்அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஆகியோர் இணைந்துசமர்ப்பித்தயோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

இந்தத் திருத்தத்தை மேற்கொள்வதாயின் மக்களின் கருத்தறியப் படவேண்டும் என்பது அதாவது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்பது கட்டாயம் என்பதால், அரசமைப்பின் 19ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டபோது இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே இப்போது மக்களின் கருத்தறியாமல் எப்படி இந்தத் திருத்தத்தை மேற்கொள்ள முடியும் என்கிற கேள்வி எதிர்க்கட்சிகளிடம் இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலைத் தாமதிப்பதற்கு அல்லது நிறுத்துவதற்கான முயற்சியே இது என்று அவை குற்றஞ்சாட்டுகின்றன.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி நிறுவனங்கள், கல்வி அமைச்சின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள், பிக்குகள் மற்றும்பிக்குணிகள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

ஜனாதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு மற்றும் அரச தகவல் திணைக்களம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப் போட்டிக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கானகடைசிநாள் ஜூலை 31 ஆகும். மேலும் போட்டி நிபந்தனைகள்மற்றும்விண்ணப்பப் படிவம், ஆக்கங்களை அனுப்ப வேண்டிய விதம் தொடர்பான மேலதிக தகவல்களையும் சட்டமூலங்களையும் அரச தகவல் திணைக்களத்தின் ழுழுழ.எஆஷ். ஆலிஸ.யிவ/உலிஐமிழிஉமிற்வி/ ஶ்ரீற்ணுயிஷ்உகூஃஷ்ஐழிஐஉள-துழிஐழிஆளதுளஐமிணுஷ்-யியி இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

## பட்டக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவின்கீழ்அங்கீகரிக்கப்பட்டபட்டம் வழங்கும் நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படுகின்றபட்டப்படிப்புக்காக உள்ளீர்த்துக் கொள்வதற்கான குறைந்தபட்ச தகைமையாகக் கருத்தில் கொள்வதற்கும், குறித்த தகைமைகள் மூலம் உள்ளடக்கப்படாத விதிவிலக்கான சந்தர்ப்பங்களுக்குயுகேநாரிக்(ஷீலு ஹிபுயூணுாளீ)நிறுவனத்தின்மூலம் சான்றுப்படுத்திக் கொள்வதற்கும் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்வழங்கியுள்ளதுஎன்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



## சட்டவிரோதமாக புதையல் தோண்டிய நால்வர் கைது

அம்பாறையில் உஹன பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திஸ்ஸபுர பகுதியில் சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிய நால்வர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என உஹன பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திஸ்ஸர மற்றும் ஜா - எல ஆகிய பகுதிகளில் வசிக்கும் 27,28,30 மற்றும் 38 வயதுடைய நால்வரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் பொருள்கள் சில கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை உஹன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

## பூநகரிக் கடற்கரையில் கரையொதுங்கிய சடலம்

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை தெற்கு கடற்கரையில் ஆணொருவரின் சடலம் கரையொதுங்கிய நிலையில் காணப்படுகின்றது.

குறித்த சடலம் யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுப்பட்டவர் கைது

**பசறையில் சம்பவம்**

கசிப்பு உற்பத்தியில் ஈடுப்பட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் 26 வயதுடைய எல்டப் மேற் பிரிவைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய அந்தப் பகுதிக்கு சென்று தேடுதலை மேற்கொண்ட போது குறித்த நபரின் வீட்டுக்கு பின் புறத்தில் கசிப்பு உற்பத்திக்கு ஆயத்தமான நிலையில் வைக்கப்பட்டு இருந்த ஒரு லட்சத்து முப்பதாயிரம் மில்லிலீற்றர் கோடா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்தோடு கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்துப்படும் பீப்பாய் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேக நபர் மீது வழக்கு தொடர்வதற்கான ஏற்பாடுகள் நடத்தப்பட்டு வருவதுடன் மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# நல்லூர் பெருந் திருவிழா ஏற்பாடுகள் குறித்து யாழ். மாநகர சபை அறிவிப்பு

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பில் யாழ். மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் அறிவித்துள்ளார்.

மேற்படி நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா 2024 ஆம் ஆண்டிற்கான புற ஏற்பாடுகள் முதலாவது கலந்துரையாடலானது மாநகர ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரனின் தலைமையில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் பிரதி பொலிஸ்மா அதிபர், நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை போக்குவரத்துச் சபை, யாழ் மாவட்ட தனியார் பஸ் சங்கம், பிரதேச செயலகம் நல்லூர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை சாரணர் சங்கம், அன்னதான மடங்கள், தண்ணீர்பந்தல் என்பவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தார்கள்.

இக்கூட்டத்தில் பெருந்திருவிழா புற ஏற்பாடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. ஆலயச் சூழலில் வீதிப்போக்குவரத்து நடவடிக்கைகள் 07.08.2024 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் 04.09.2024 நள்ளிரவு வரை ஆலய வெளி வீதியின் ஊடான போக்குவரத்துக்கள் முற்றாக தடைசெய்யப்பட்டிருக்கும்.

2. பிரதான வீதித்தடைகள் பருத்தித்துறை வீதியில் மாநகர சபைக்கு முன்புறம் அரசடிச்சந்தி, கோயில் வீதியில் சங்கிலியன் வீதி சந்தி, பிராமணக்கட்டு குள வீதிச்சந்தி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும். சுகாதார பாதுகாப்பு தேவைகளிற்கேற்ப மேற்படி வீதித்தடைகளின் அமைவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

3. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டது போல இம்முறையும் மாற்று வீதி ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் வழமைபோல் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு முன்னால் உள்ள குறுக்கு வீதியால் பயணித்து நாவலர் வீதி ஊடாக ஆனைப்பந்திசந்தியை அடைந்து யாழ் நகரை அடைய முடியும். யாழ் நகரில் இருந்து திரும்பும் வாகனங்கள் அதே பாதை ஊடாக பருத்தித்துறை வீதியை அடைய முடியும். விசேட பெருந்திருவிழாக்களின் போது முத்திரைச்சந்தியில் திரும்பி கச்சேரி நல்லூர் வீதி ஊடாக நாவலர் வீதியை அடைந்து பயணிக்க முடியும். கோயில் வீதி வழியாக வரும் வாகனங்கள் சங்கிலியன் வீதியூடாக பருத்தித்துறை வீதியை அடைந்தும், செட்டித்தெரு ஒழுங்கையூடாக பருத்தித்துறை வீதியை அடைந்து பயணிக்க முடியும்.

4. தூக்குக்காவடிகள் வழமைபோல் பருத்தித்துறை வீதி வழியாக உள்நுழைந்து ஸ்ரீமுருகன் தண்ணீர் பந்தலில் காவடிகள் இறக்கி டிராக்டர்கள் செட்டித்தெரு வீதியூடாக வெளியேற வேண்டும்.

5. ஆலய வீதிச்சூழலில் வீதித்தடைகளுக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வழமை போல வாகன அனுமதி அட்டை மாநகர சபையால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிரந்தர வியாபாரிகள் பொருட்களை ஏற்றி இறக்க விசேட நேரக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

6. உற்சவ காலங்களில் சிறுவர்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

7. ஆலய வெளி வீதி சூழலில் வியாபார, விளம்பர மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது.

8. உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் பொலித்தீன் பாவனை முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.

9. உற்சவ காலங்களில் ஆலய வெளி வீதி சூழலில் காலணிகளுடன் நடமாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

10. உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் பக்தி கீதங்கள் மட்டுமே ஒலிபரப்பு செய்யமுடியும்.

11. உற்சவ காலங்களில் விநியோகிக்கப்படும் விளம்பரங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்களில் கடவுள் திருவுருவப்படங்கள் பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

12. ஆலயச் சூழலில் ட்ரோன் கமராக்களைப் பயன்படுத்தி காணொளி பதிவு செய்வது தவிர்க்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு அமைவாக நல்லூர் பெருந்திருவிழா நடைபெறுவதற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என யாழ். மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(05)

# போதைப்பொருள் பாவனையை தடுக்க விழிப்புணர்வு செயற்றிட்டம்







(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கிழக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனையைத் தடுக்கும் விழிப்புணர்வு செயற்றிட்டத்தை கல்வி அமைச்சுடன் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து நேற்று முன்தினம் வைத்தார்.

முதல் கட்டமாக இடம்பெற்ற இவ்விழிப்புணர்வு நிகழ்வு, மூதூர் சோனையூர் கல்லூரி, ஸ்ரீஹன்பஹா வித்தியாலயம், இலங்குதுறை முகத்துவாரம் இந்து கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இடம்பெற்றது. 1000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (05)

# சைவத் தமிழ் முறைப்படி பளவெளி ஆதிசிவன் ஆலய திருக் குடமுழுக்கு

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை, வளத்தாப்பிட்டி கிராமத்தில் எழுந்தருளி அருளாட்சி புரியும் ஆதிசக்தி உடனுறை ஆதி சிவன் ஆலய குடமுழுக்கு விழா சைவத் தமிழ் முறைப்படி நேற்று (செவ்வாய்க்கிழமை) சிறப்பாக நடைபெற்றது.

ஓரங்கமான எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஆலய பரிபாலன சபை தலைவர் சி.துரைசிங்கம் செயலாளர் எஸ்.தங்கவடிவேல், பதில் தலைவர் வெ.ஜெயச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் முறைப்படி நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். (05)

# குடிசன மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பிலான தெளிவூட்டல் நிகழ்வு





(ஹஸ்பர் ஏ.எச்)

குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாக அமைந்துள்ள கணக்கெடுக்கும் கட்டத்தின் பயிற்சிகள் மற்றும் கள நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன் மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்களில் தொகை மதிப்பு நடவடிக்கையை வழிகாட்டும் சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர்களான தொகை மதிப்பு ஆணையாளர், பிரதி மற்றும் உதவித் தொகைமதிப்பு ஆணையாளர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

புள்ளி விவரத்திணைக்களத்தின் வெளிக்கள முகாமைத்துவ பிரிவு மற்றும் மாதிரி அளவீட்டுப்பிரிவின் பணிப்பாளரினால் மாவட்ட அரசாங்க அதிபரின் சேவையினை பாராட்டி நினைவுசின்னம் இதன்போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அறிமுகம், தொகைமதிப்பின் கட்டங்கள், தொகைமதிப்பின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்புக்கள், கணக்கெடுத்தல், தொகைமதிப்பில் சேகரிக்கப்படும் தகவல்கள், தொகைமதிப்பு உத்தியோகத்தர்களின் வகிபாகங்கள், கால அட்டவணை போன்ற பல விடயங்கள் இதன்போது தெளிவூட்டப்பட்டது.

இதன்போது மாவட்ட பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கே.விஜயதாசன், புள்ளி விபரத்திணைக்களத்தின் வெளிக்கள முகாமைத்துவ பிரிவு மற்றும் மாதிரி அளவீட்டுப்பிரிவின் பணிப்பாளர் எஸ்.எச். மன்சூர், புள்ளி விவரத்திணைக்களத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பியலால் அரச குலரத்ன, பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், கணக்காளர்கள் உட்பட புள்ளி விபரத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# 35 வருட சேவையிலிருந்து அதிபர் ஜனுல் ஹக் ஓய்வு

(ஐ.ஏ.காதிர் கான்)

வட மத்திய மாகாண அநுராதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள அநுஃநேகம முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் அதிபர் எச். ராஜி ஜனுல் ஹக், தனது 60 ஆவது வயதில் (2024.07.05 அன்று) அதிபர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இதே பாடசாலையில் 1989.09.01 ஆம் திகதியன்று முதலாவது ஆசிரியர் நியமனத்தைப் பெற்றதன் பின், மேலும் பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் இவர் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்து, 2015.05.01 ஆம் திகதியிலிருந்து 2024.07.08 ஆம் திகதி வரை, அநுஃ நேகம முஸ்லிம் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி பல சேவைகளைச் செய்த இவர், 35 ஆண்டுகளைக் கல்விக்காக அர்ப்பணித்து, பலரது உள்ளங்களில் இடம் பிடித்தார்.

அகில இலங்கை சமாதான நீதிவானாகவும், கல்நேவ பொலிஸ் ஆலோசனை சபை உறுப்பினராகவும், கல்நேவ மத்தியஸ்த சபை உறுப்பினராகவும், சமூக சேவை



டிப்ளோமாதாரியாகவும் விளங்கிய இவர், பல்வகை ஆளுமை கொண்டவராவார்.

நேகமயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் ராஜி ஜனுல் ஹக், நேகமயிற்கு பெருமை சேர்த்துத்தந்து மற்றும் கல்விப் பணிப்பாளராகத் திகழ்ந்து பல சேவைகளையும் புரிந்த மர்ஹூம் பீ. ஹபீப் - மர்ஹூமா ஜே.எல். ராஹிலா உம்மா

தம்பதிகளின் புதல்வருமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# தனக்கு வாக்களிக்காத முஸ்லிம்களைத் தண்டிக்கும் கோட்டா அரசின் நடவடிக்கைதான் ஜனாஸா எரிப்பு

## பைஸர் முஸ்தபா ஆவேசம்



(ஐ. ஏ. காதிர் கான் )

ஜனாதிபதித் தேர்தலின் போது தனக்கு ஓட்டுப்போடாத ஒரேயொரு காரணத்தால் தான், கோட்டாபய முஸ்லிம்களைத் தண்டித்தார். இவ்வாறு முஸ்லிம்களைத் தண்டிக்க, கேட்டாபய அரசு எடுத்த மிக மோசமான செயல்தான் ஜனாஸா எரிப்பு என, முன்னாள் அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான பைஸர் முஸ்தபா குற்றம் சுமத்திப் பேசினார்.

ஜனாஸா தகனம் பற்றிய ஆவணப் படம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே பைஸர் முஸ்தபா மேற்கண்டவாறு கூறினார்.

பைஸர் முஸ்தபா தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கும்போது –

முஸ்லிம்கள் படும் துன்பங்களை விவரிக்கும் ஆவணப்படத்தில், அதன் தயாரிப்பாளர்கள் எடுத்துள்ள முயற்சிகளைப் பாராட்டுகின்றேன். அதே வேளையில், இந்தப் பிரச்சினை உண்மையில் ஆட்சியில் இருந்த இனவாத ஆட்சியின் விளைவு என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் .

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது ஆட்சியாளர்களும் அவர்களுக்கு வாக்களிக்காததால், முஸ்லிம்கள், தமிழர்கள் மற்றும் பிற சிறு பான்மையினர்களைத் தண்டிப்பது பொருத்தமானது என்று நினைத்தனர்.

இந்த இனவாத, மத வெறி மற்றும் மனிதாபிமானமற்ற பார்வையின் விளைவாகத்தான், மரணித்த முஸ்லிம்களது ஜனாஸாக்களை எரித்து தகனம் செய்யும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர்.

அன்றைய அரசாங்கத்தில் இருந்த அரசியல்வாதிகளும், இந்த முடிவுகள் எந்த பகுத்தறிவுக் காரணத்தினாலும் எடுக்கப்பட்டவைகள் அல்ல என்பதை நன்கு தெரிந்தும், கைகெட்டி சும்மா பார்த்துக் கொண்டிருந்தனர்.

எனவே, பெரும்பான்மையினராக இருந்தாலும் சிறு பான்மையினராக இருந்தாலும், எந்த ஒரு சமூகத்திற்கும் இவ்வாறு நடக்காமல் இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். அத்துடன், இதனைத் தடுக்கவும் நாம் முயற்சிக்க வேண்டும். இவ்வாறான விடயங்களையும் நாம் ஆவணப் படத்தில் சித்தரிக்க வேண்டும். – என்றார். (05)

# கொழும்பு – கோட்டை பகுதியில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டன

## விசாரணை ஆரம்பம்

கொழும்பு – கோட்டை பகுகுதியில் உள்ள பழைய செயலகத்திற்கு அருகில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டதாக கொழும்பு துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு துறைமுக நகர அதிவேக வீதியுடன் இணைக்கப்பட்ட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளின் போதே 6 அடி ஆழத்தில் இந்த மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இந்த மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் இவை பல வருடங்கள் பழைமையானவையென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, அகழ்வு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதுடன், இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதிமன்றத்தினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த இடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொழும்பு துறைமுக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.(05)

# சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்ந்த குற்றச்சாட்டில் நபர் கைது

நுவரெலியாவில் பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக மாணிக்கக் கல் அகழ்வு பணியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து மாணிக்கக் கல் அகழ்வு பணிக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# நுவரெலியாவுக்கு மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கல்







(எஸ் சதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக புலமைப்பரிசில் வழங்கும் நடவடிக்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர் ஜீவன் தொண்டமான், மத்திய மாகாண ஆளுநர் லலித்யூகமகே, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், நுவரெலியா மாட்ட செயலாளர் நந்தன கலபொட மற்றும் மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)





# பரசூட் முறையில் செய்கை செய்த நெற்செய்கையின் அறுவடை விழா



(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை விவசாய விரிவாக்கல் நிலையத்திற்குட்பட்ட மணற்பிட்டி கிராமத்தில் பரசூட் முறையில் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கையின் அறுவடை விழா திங்கட்கிழமை இடம்பெற்றது.



தொழில்நுட்ப உத்தியோகத்தர் துஷாந் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் திருமதி நித்தியா நவரூபன், தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பரசூட் முறையில் செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கை அறுவடை செய்யப்பட்டு பயிர்வெட்டு அளவீடு செய்யப்பட்டது. வீசிவிதைத்தலை விடவும் பரசூட் முறையில் அதிக விளைச்சல் கிடைத்ததோடு உற்பத்தி செலவும் குறைவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.




மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.பரமேஸ்வரனின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் இவ்வாறான முன்மாதிரி துண்டச்செய்கைகள் செய்கை பண்ணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் குகதாசனால் மாணவர்களுக்கு உதவிகள்

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவரது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு குச்சவெளி கோட்டத்தில் உள்ள திரியாய், குச்சவெளி, இரனைக்கேனி ஆகிய ஊர்களில் அமைந்துள்ள பள்ளிக்கூடங்களில் கல்வி பயிலும் ஐந்தாம் வகுப்பு மாணவருக்கு ஒவ்வொன்றும் 1930 ரூபா விலையான ஆற்றல் என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்டது.

இந்நூல்களை திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவரும் திருக்கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கதிரவேலு சண்முகம் குகதாசன் வழங்கி வைத்தார். (05)

# திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆடி அமாவாசை உற்சவம் தொடக்கம்





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம்

நாளை (வியாழக்கிழமை) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது என்று ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார் .

இந்த உற்சவம் 18 நாட்கள் நடைபெற்று ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ் வரக்குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெறவுள்ளது.

பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை உற்சவம் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்வார்கள்என்பதற்காக முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தீர்த்தம் அன்று பிதிர்க்கடன் செலுத்துகின் றவர்களுக்கு வசதியாக பத்து சிவாச்சாரியார்கள் உள்ளடக்கி பிதிர்க்கடன் நிறைவேற்றுகின்ற வேலை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.(05)

# தொழில் வழிகாட்டல் செயலமர்வு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் செயலமர்வு பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம். றிசாத் தலைமையில் இடம்பெற்றது.



பாடசாலையின் ஆலோசனை வழிகாட்டல் பிரிவின் பொறுப்பாளர் ஆசிரியர் எம்.சீ.ஹிஜாஸின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்செயலமர்வில், கல்முனை பிரதேச செயலகத்தின் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் றிபாத் வளவாளராகக் கலந்து, எதிர்காலத்தில் மாணவர்கள்தங்களுடையஆளுமைகளை விருத்திசெய்யக்கூடியதொழில்தெரிவுகளில் எவ்வாறு ஈடுபடுவது என்பது தொடர்பான விளக்கங்களையும்ஆலோசனைகளையும் வழங்கினார். இதன்போது கலந்துகொண்ட ஆசிரியர்களையும் மாணவர்களையும் படங்களில் காணலாம். (05)

# அரவி ந்குமாரின் நிதி ஒதுக்கீட்டில் தோட்ட வீதி கொங்கிறீட்டானது





(எஸ் சதீஸ்)

கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரின் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ், அப்புத்தளை, இதல்கஸ்ஹின்ன தோட்டத்தில், ( வெளிமடை பிரதேச செயலகத்திற்கு உட்பட்டபகுதி)கொங்ரீட் இடப்பட்டு புனரமைக்கப்பட்ட பாதை, மக்கள் பாவனைக்காக அன்மையில் கையளிக்கப்பட்டது இதன் போது அமைச்சர் நாடாவை வெட்டி வீதியைத் திறந்துவைப்பதையும்நிகழ்வில்கலந்து கொண்டவர்களையும் படங்களில் கானலாம்.(05)

# ஜனாதிபதி புலமைப் பரிசில் வவுனியாவில் தொடக்கம்



வறிய மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதியின் புலமைப் பரிசில் திட்டம் வவுனியா மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா, மதவுவைத்தகுளம் பகுதியில் அமைந்துள்ள பொருளாதார வர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைவாகவவுனியாமாவட்டத்தில் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளை சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதியின் புலமைப் பரிசில் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.



மத்திய நிலையத்தில் குறித்த நிகழ்வு நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது.

நாடு பூராகவும் வறிய மாணவர் களின் கல்வித் தரத்தை உயர்த்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் பல பாடசாலைகளிலும் இருந்து பல மாண




இந்நிகழ்வில்கிராமியபொருளாதார அபிவிருத்திஇராஜாங்கஅமைச்சர்காதர் மஸ்தான்,வன்னிமாவட்டநடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன், ஜனாதிபதி செயலக மேலதிக சிரேஸ்டசெயலாளர்சமன்பந்துலசேன, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்,வவுனியாதெற்குமற்றும் வடக்குவலயகல்விப்பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், பிரதேச செயலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.07.2024இல் வெளியிடப்பெற்றது